குறைவாக இருப்பதால், அந்த நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்களை அத்தகைய அச்சுக் கூடங்களில் அச்சிடுவதன் மூலம், ஒரே இடத்தில் கொடுத்து காலதாமத மானதைத் தடுக்கும் முயற்சியில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூல்கள், நோட்டுப் புத்தகங்கள் அச்சிடுவதற்கு டெண்டர் கேட்கப்படுகிற முறை இருக்கிறது. அந்த முறையில் கொடுக்க முன்வருபவர்களிடம் விண்ணப்பங்கள் கேட்டு, அத்தகைய அச்சகங்களின் சக்திக் கேற்ப, அவர்கள் ஆற்றிய பணிகளுக்கேற்ப, பாடநூல்கள் அச்சியேற்றும் பணி பிரித்து வழங்கப்படுகின்றது. அந்தவகையில் யாரும் விண்ணப்பிக்கலாம்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வெளியிடுகிற நோட்டுப் புத்தகங்களின் பேப்பர்கள் தரமில்லாமல் இருக்கின்றன. ஆகவே அவற்றிற்குத் தரமான தாள்கள் உபயோகிக்கப் படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாளைப் பொறுத்தவரையில் மத்திய அரசு மலிவான விலைக்கு ஒதுக்குவதால், இந்தத் தாளில் தரக் குறைவு இருப்பதற்கு நியாயம் இல்லை. ஒரு வேளை வெளியில் தயாராகிற நோட்டுப் புத்தகங்கள் தரக் குறைவாக இருக்கலாம், இருக்கக்கூடும். அப்படியிருந்தால் அது வேறு பிரச்சினை.

மருதம்புத்தூர் கிராம உயர்நிலைப்பள்ளி.

* 2056—திரு. பி. எச். பாண்டியன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள மருதம்புத்தூர் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் மற்றும் அறிவியல் விஞ்ஞான கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1990 சனவரி 25]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிக்கூடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம். இந்தப் பள்ளிக் கட்டிடத்திற்காக முதலில், மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1.8 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டிடம் கட்டினார்கள். அது உயர்நிலைப் பள்ளியாக இருக்கிற காரணத்தால், விஞ்ஞானக் கூடம் அங்கே இல்லாமல் இருக்கக் கூடாது என்ற காரணத்தினால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதை உணர்ந்து, அங்கே விஞ்ஞானக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பை உருவாக்க முன்வருவாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் இந்தப் பள்ளிக் கட்டிடத்தைப் பற்றி ஆர்வத்தோடு கேட்டதன் அடிப்படையில், அதைக் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இதேபோல, நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சபாநாயகராக இருந்து உறுப்பினராக இப்போது தன்னுடைய தொகுதியின் குறைகளைச் சொல்வதால் அந்தத் தேவை எவ்வளவு பெரியது என்பதை அவரே எடுத்துச் சொல்லக் கூடும். எனவே இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு நம்முடைய முன்னாள் சபாநாயகர் போன்ற பெருமக்கள் அந்தந்தப் பள்ளிக்கூடங்களின் வளர்ச்சிக் குழுவின் தலைவர்களாக இருந்து உரிய நிதியைத் திரட்டித் தந்து பள்ளிகளின் வளர்ச்சிக்கு வழிகாண வேண்டுமென்று நான் பொது நல நோக்குடன் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களையுமே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே போல, சேரன்மாதேவி, பொள்ளக்கால் பொதுக்குடி கள்ளிடைக்குறிச்சியிலும் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு அங்கேயும் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. கள்ளிடைக்குறிச்சி உயர்நிலைப் பள்ளிக்கு புரட்சித் தலைவர் அவர்கள் வந்து 1.75 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். அங்கும் விஞ்ஞானக் கூடம் இல்லை. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இது போன்ற பள்ளிகளின் வளர்ச்சிக்கு வளர்ச்சிக் குழுத் தலைவராக இருந்து நல்ல உள்ளம் கொண்டவர்களிடமிருந்து பணம் திரட்டி இது போன்ற நல்ல காரியங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் என்னால் முடிந்த அளவுக்கு பத்தாண்டுக் காலத்தில் செய்திருக்கிறேன். சேரன்மாதேவி.....

[1990 சனவரி 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் வினா தான் கேட்கிறாரா அல்லது விளக்க உரை ஆற்றுகிறாரா ?

திரு. பி. எச். பாண்டியன்; விளக்க உரையல்ல. சேரன் மாதேவி பள்ளியில் உட்கார பெஞ்ச் கூட இல்லை. என்னுடைய நண்பர்களிடம் சொல்லி ரூ. 75,000-க்கு பெஞ்சுகள் செய்து போட்டிருக்கிறேன். அதே மாதிரி எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் செய்ய வேண்டு மென்ற ஆசை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு திட்டத்தை வகுப்பார்களா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்றத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். பொதுவாகவே கல்வித் துறையினுடைய பணி சிறக்க வேண்டுமானால், மாணவர்களுக்குத் தகுந்த கல்வி கிடைக்க வேண்டுமானால், எந்தப் பள்ளிக் கூடமாக இருந்தாலும், பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தோடு, அந்தக்குழுவின் கண்காணிப்போடு, ஆதரவோடு நடைபெற வேண்டுமென்ற கருத்தை நான் பல இடங்களில் தெரிவித்திருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்களும் கூட அந்தத் தொகுதியில் உள்ள பள்ளிக் கூடங்களினுடைய வளர்ச்சிக்காக, குழு அமைத்து, அதில் அவர்கள் இடம் பெற விரும்புவார்களேயானால், பெருமளவுக்குப் பலகுறைகளைப் போக்க முடியும். நேற்று மாலை கூட சைதையில் 136 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற 'மாதிரி உயர்நிலைப் பள்ளி'யில் மாணவர்களுக்கான பெஞ்சுகள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் ரூ. 1.25 இலட்சத்திற்கு பெஞ்சுகளும், நாற்காலிகளும் அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக, வளர்ச்சிக் குழு வழங்கிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஆசிரியர்களுக்குக் கூட 20 நாற்காலிகள் வழங்கினார்கள். தேவையினுடைய அளவுக்கு, அரசாங்கத்தின் நிதி ஈடு கொடுக்க முடியாத அளவுக்கு, இலவசக் கல்வி என்ற அடிப்படையில் தொடங்கி விரிவாக வளர்ந்துவிட்ட திட்டத்தை நாம் காப்பாற்ற வேண்டி இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா வகையிலும் ஒத்துழைத்து பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.